பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 32 ஞாயிற்றுக்கிழமை (16-08-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 262

# மட்டக்களப்பில் பொலீஸ் மீது அதிரடி

# 7 பேர் பலி; மூவரைக் காணவில்லை!

## ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, ஆகஸ்ட் 16

**மட்டக்களப்பு — அம்பாறை மாவட்டங்களின் எல்லைப் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஏழு பொலிஸார் உயிரிழந்தனர்; ஐந்து பேர் காயமடைந்தனர்; மேலும் மூவரைக் காணவில்லை; பொலிஸாரிடமிருந்து ஆறு நவீன ரகத் துப்பாக்கிகளை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.**

நேற்றுக் காலை எட்டு மணியளவில் 36 ஆம் கட்டை பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேறி தமிழ்—சிங்கள எல்லைப் பிரதேசங்களில் தடைகளை அகற்ற வந்த பொலிஸார் மீதே சுமார் 3 நிமிடநேரம் இந்த அதிரடித் தாக்குதல் நடத்தப் பட்டது.

இத்தாக்குதலில் ஆறு பொலிஸார் கொல்லப்பட்டதை விடுதலைப் புலிகள் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

தாக்குதல் நடத்தப்பட்ட வேளை தாக்குதலில் சிக்கிய பொலிஸாருக்கு உதவுவதற்காக பதுளைச் சந்தியில் இருந்து முன்னேறி வந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

அம்பாறை மாவட்டம் பக்கியெல்ல கிராமத்தில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் அணி மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று வெரித்தாஸ் வானொலியின் சிங்கள சேவையில் அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் ஆறு பொலிஸார் உயிரிழந்தனர் என்றும், ஐவருக்குக் காயமேற்பட்டது என்றும் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நான்கு பொலிஸார் கடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5-10)

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஆக. 16

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் எல்லைப் பிரதேசத்தில் நேற்றுக் காலை நடத்திய தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு :-

| | | |
|---|---|---|
| ★ ரி 56 துப்பாக்கிகள் | — | 06 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 806 |
| ★ மகஸின்கள் | — | 26 |
| ★ மகஸின் ஹோல்சர்கள் | — | 06 |
| ★ இராணுவச் சப்பாத்து | — | ஒரு சோடி |
| ★ இராணுவத் தொப்பிகள் | — | 03 |
| ★ இராணுவப் பட்டிகள் | — | 02 |

(உ-5)

## பொன்னாலை நோக்கி நேற்று ஷெல், பீரங்கித் தாக்கு

காரைநகர் படையினர் நேற்று முன்தினம் இரவும், நேற்றுக் காலையும் பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

கடற்பகுதியில் இருந்து நேற்று பீரங்கித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. பொன்னாலையிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன.

இதே சமயம், நேற்று பகல் 1.45 மணியளவிலும் பொன்னாலை, திருவடிநிலைப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் பொன்னாலையில் இரு வீடுகள் சேதமாகின என்று தெரிவிக்கப்பட்டது.

இடைவிடாது தொடர்ந்து நடந்த இந்தத் தாக்குதல் சத்தங்கள் யாழ். நகரிலும் கேட்டன. (ஓ 28-15)

## 500 ஈழ அகதிகள் திங்கள் புறப்பாடு

சென்னை, ஆக. 16

ஈழ அகதிகள் 500 பேர் நாளை திங்கட்கிழமை இராமேஸ்வரத்தில் இருந்து கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று இராமேஸ்வரம் மாவட்டக் கலெக்டர் தெரிவித்தார்.

3 மாத கால இடைவெளியின் பின்னர் அகதிகளுக்கான கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-த)

## ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 16

தீவகப் பகுதியில் இருந்து நேற்று மாலை 6 மணியளவில் அராலித்துறை கரையோரப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

## லலித் வெளிநாட்டுக்கு

கொழும்பு, ஆக. 16

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி அவரது மனைவி மற்றும் மகளுடன் கடந்த வியாழனன்று விடுமுறையில் ஐரோப்பாவுக்குப் பயணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

## திருமலை - பாலையூற்றில் கைதான 23 தமிழர்களும் தொடர்ந்து தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஆக, 16

திருகோணமலை மாவட்டம், பாலையூற்றில் படையினரால் கைது செய்யப்பட்ட நான்கு பெண்கள் உட்பட 23 தமிழர்களும் தொடர்ந்து ஒரு வார காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பாலையூற்றுக் கிராமத்தைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் மேற்படி 23 தமிழர்களையும் கைது செய்தனர்.

இத்தவேளை — கடந்த செவ்வாயன்று திருகோணமலை நகரின் பல பகுதிகளைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் அங்கு பெரும் எடுப்பிலான தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர் என்றும்—

அச்சமயம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழர்கள் அனைவரும் உட்துறைமுக வீதியில் உள்ள மண்டபம் ஒன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கே முகமூடிகளின் முன்பாக நிறுத்தப்பட்டனர் என்றும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ஓ-5)

## விபத்தில் கால் இழப்பு

மோட்டார் சைக்கிள்—சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்றவர் முழங்காலுக்கு கீழ் ஒரு காலை இழந்தார்.

மீசாலையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மீசாலையைச் சேர்ந்த செல்லையா ரவி (வயது 27) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே காலை இழந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## வடக்கில் மேலும் இரண்டு எய்ட்ஸ் நோயாளிகள்!

### பரிசோதனையில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 16

'எய்ட்ஸ்' நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

வெளிநாடுகளில் வேலை பார்த்து பின்னர் தாயகம் திரும்பிய இரு குடும்பஸ்தர்களுக்கே 'எய்ட்ஸ்' நோய் பீடித்திருப்பது, யாழ். ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப ஆய்வுகூட பரிசோதனைகளில் இருந்து தெரியவந்திருக்கிறது.

கடந்த ஜூன் மாதம் சாதாரண வயிற்றுழைவு நோயுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மானிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவருக்கும்—

மூட்டு நோ வருத்தத்துக்காக சிகிச்சை பெற வந்த சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவருக்குமே 'எயிட்ஸ்' பீடித்திருப்பதாக

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தாயகம் திரும்புவோர் குறித்து எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஆக. 16

இந்தியாவில் இருந்தும் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் தாயகம் திரும்புவோரால் வடக்கில் 'எய்ட்ஸ்' நோய் பரவும் சாத்தியங்கள் உண்டு என்று வைத்திய வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

'எய்ட்ஸ்' நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அடையாளம் காணப்பட்டிருப்பது பற்றிக் கருத்து வெளியிடுகையிலேயே வைத்திய வட்டாரங்கள் மேற்கண்ட எச்சரிக்கையை வெளியிட்டன.

வடக்கில் இதுவரை 'எய்ட்ஸ்' நோயினால் பீடிக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்ட ஆறுபேரில் ஒருவரைத் தவிர ஏனைய ஐவருமே வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் என்பதையும் — ஆறாவது நபருக்கும் வெளிநாட்டில் இருந்து வந்த அவரின் கணவன் மூலமே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று முன்தினம் இரவு நடந்த ஷெல் வீச்சில் காயமுற்ற சிறுவனும் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஷெல் தாக்குதலின் போது காயமடைந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பதிநாதர் கவாஸ்கர் (வயது 3) என்ற சிறுவன் நேற்று அதிகாலை 2 மணிக்கு மரணமானார்.

நேற்று முன்தினம் சம்பவம் நடந்த தினமன்று உயிரிழந்த கவிதா இராசரத்தினம் (16 வயது) என்ற பெண்ணின் சகோதரியின் மகனே இறந்த சிறுவன் ஆவான்.

இறந்த சிறுவனின் தாயார் அவரது குடும்பத்தைச் சேர்ந்த மற்றும் இருவரும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர். (ஓ-15-162)

## கணவர் ஷெல் வீச்சில் காயம்: வீட்டில் இளம் மனைவி சுருக்கிட்ட நிலையில் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 16

யாழ். நகரில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் காயமுற்ற ஒருவரின் மனைவி, நேற்று மரணமானார்.

வெள்ளிக்கிழமை இரவு நடந்த ஷெல் தாக்குதலில், வேலணையில் இருந்து இடம் பெயர்ந்து வந்து ஓட்டுமடத்தில் வாழ்ந்த குடும்பஸ்தர் ஒருவரும் காயமடைந்தார்.

அவரது இளம் மனைவி வெள்ளிக்கிழமை இரவு முழுவதும் பதுங்குகுழிக்குள் இருந்தார் எனக் கூறப்படுகிறது.

ஆனால் நேற்றுக்காலை அவர் தமது வீட்டில் சடலமாகத் தொங்கிக் கொண்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

**கேட்டினைத் தவிர்க்க காட்டினை வளர்ப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நகரில் மூக்குக் கண்ணாடித் துறையில்
அனுபவமிக்க முன்னோடி நிறுவனம்

★ எரிக் கணேஷ் ★

566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்களுக்கு தேவையான சகல விதமான வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடி வகைகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

[5254]

## 2ம் ஆண்டு ஞாபகார்த்த திருப்பலி பூசை

யோசப் வசந்தி ● யோசப் மேரிமதிவதனி

யோசப் வசந்தி, யோசப் மேரிமதிவதனி ஆகியோரின் நினைவாக நாளை [17-08-92] திங்கட்கிழமை காலை 7 மணிக்கு முகமாலை மாதா கோயிலில் இரங்கற்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.


உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

கிளாலி வீதி,
எழுதுமட்டுவாள்.
[22190]

தகவல்:
இ. யோசேப்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அப்பா! பரமசிவம்



அமரர்
### கார்த்திகேசு திருஞானசம்பந்தர்
(நயினாதீவு)
(ஓய்வு பெற்ற நில அளவையாளரும், யா/ தொழில் நுட்பக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளரும்)

ஆண்டவன் படைப்பு:
1938 — 06 — 13

அரக்கர் பறிப்பு:
1990 — 08 — 16

ஏக புத்திரனே! எங்கள் அருமை அப்பாவே!
ஏகாதசி தினமதிலே எங்களை
ஏங்க விட்டு எங்கு சென்றீர்?
புன்னகை குடியிருக்க, புகழ் வண்ணம் சேர்ந்திருக்க
அறிவு நலம் சிறந்திருக்க, அன்புள்ளம் நிறைந்திருக்க
கண்ணியம் நிறைந்த உங்கள் கண்ணாடி முகம்
காணாது ஏங்கித் தவிக்கிறோம் அப்பா!
பாத்தியைக் கட்டி எம்மை
பண்புடன் வளர்த்து விட்டு
பூத்து நல் மணத்தைச் சிந்தி
வாழ்ந்திடும் சிறப்பைக் காண
கனிந்திடும் வேளை தனில் காற்றென எம்மை விட்டு
பறந்திட பலி கொண்டோன் யார் அப்பா!
எக் காலை முன் வைத்தாலும்
எக் கருமத்தைச் செய்தாலும்
எம் மேடை ஏறினாலும் செருக்குடன் நாமிருக்க
எங்கள் முன் உங்கள் திருமுகம் காண்போம்
இனி எவ் இன்பம் எமக்கு நேர்ந்தாலும்
வழிகாட்டி இன்றி நாம் வாழத் தவிக்கிறோம்
எம் வாழ்வு ஒளி பெற
தெய்வமான உங்களையே வணங்கி,
உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் உயிர்
உள்ளவரை இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் தவிக்கும்:
மனைவி, பிள்ளைகள்.

621, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
[22190]

## உற்சவம்

கொழும்புத்துறை, ஆக. 16

கொழும்புத்துறை கிழக்கு மணியம் பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் — ஐயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை விசேட சங்காபிஷேகத்துடன் அலங்கார உற்சவம் முடிவுறும். (ஒ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 16

மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை திங்கள் முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

(ஒ-5)

## தீவக மக்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஆக. 16

புதிய உலர் உணவு அட்டைகளைப் பெற்ற இடம் பெயர்ந்த தீவக மக்கள் அவற்றைத் தமது நிரந்தர கிராம சேவகர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. த. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆவணி மாதத்திற்கான உலர் உணவை வழங்குவதற்கு வசதியாகப் பட்டியலை தயாரித்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்புவதற்கு புதிய உலர் உணவு அட்டைகள் தேவைப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

இதே வேளை, இது வரை தங்களுக்குரிய உலர் உணவு அட்டைகளைப் பெறாதவர்கள் தங்களுக்குரிய குடும்பப் பதிவு அட்டையுடன் வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்களைச் சந்திக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (அ)

### வடக்கில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். ஆஸ்பத்திரி மருத்துவ ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் 'எய்டஸ்' பரிசோதனையை மேற்கொள்ளத் தேவையான உபகரணங்கள் உள்ள போதிலும் நோய்ப் பரிசோதனையை மேற்கொள்ள பயிற்சி பெற்ற மருத்துவ ஆய்வுகூட பரிசோதகர்கள் எவருமே இல்லை என்றும் —

மேற்கொண்டு பரிசோதனையை செய்து கொள்வதற்காக சம்பந்தப்பட்ட இரு நோயாளிகளுக்கும் கொழும்பு செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாகவும் யாழ். ஆஸ்பத்திரி மேக நோய்ச் சிகிச்சைப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் இருவருடன் சேர்ந்து இதுவரை வடக்கில் இணங்காணப்பட்ட எய்ட்ஸ் நோயாளர் எண்ணிக்கை ஆறாக உயர்ந்துள்ளது.

ஏற்கனவே வெளிநாட்டில் வேலை பார்த்து 'எய்ட்ஸ்' நோயுடன் இங்கு வந்த மூவர் பின்னர் உயிரிழந்து விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களில் ஒருவரின் மனைவி இன்னும் எயிட்ஸ் நோயுடன் யாழ் நகரை அண்டிய பகுதி ஒன்றில் வசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் —

இலங்கையில் இதுவரை மொத்தம் அறுபது பேருக்கு "எயிட்ஸ்" நோய் பீடித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் —

அவர்களில் 15 பேர் உயிரிழந்து விட்டனர் என்றும் [illegible] தெரிவித்தன. [அ-உ-5]

## ஷெல் தாக்குதல் குறித்து ஜனாதிபதிக்கு அறிவிப்பு

மண்டைதீவுப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் இரவு திடீரென குடியிருப்புப் பகுதிகள் மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் குறித்து யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

அரச அதிபர், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகம் ஊடாக நேற்று இந்தச் செய்தியை அனுப்பி வைத்தார்.

பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் மற்றும் அசௌகரியங்கள் குறித்து மேற்படி செய்தியில் விவரிக்கப்பட்டதாக அறிய வருகிறது. (ஒ-162)

## எழுதுநர் பதவி விண்ணப்பங்கள்:
## 21 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 16

எழுதுநர் சேவைக்கும், அதனோடு இணைந்த சேவைக்கும் மற்றும் தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் சேவைக்கும் ஆட்களைச் சேர்ப்பதற்காக நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்புவோர் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அவற்றைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

அடுத்து பருத்தித்துறைக்கு வரவிருக்கும் கப்பல் எதிர்வரும் 23 அல்லது 24 ஆம் திகதியளவில் கொழும்பு திரும்பிச் செல்லும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் —

அவ்வேளை விண்ணப்பங்களை கப்பலில் எடுத்துச் செல்ல வசதியாக அவற்றை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன் தமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 21 ஆம் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்களை அனுப்புவோர் அவற்றைத் தமக்கு அனுப்பாமல் நேரடியாகப் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்புமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-5)

## இந்திய சுதந்திர தினத்தன்று காஷ்மீரில் கடும் மோதல்

இந்தியாவின் 46 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட நேற்றைய தினம், காஷ்மீரில் இந்திய இராணுவத்துக்கும் காஷ்மீர் தீவிரவாதிகளுக்குமிடையே கடும் மோதல்கள் ஏற்பட்டன.

குறைந்த பட்சம் 13 பேர் கொல்லப்பட்டதாகவும், ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட மற்றும் 10 பேர் தாங்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாகக் கூறியதாகவும் அறிவிக்கப்படுகிறது.

மாநிலத்தின் பல இடங்களில் இந்திய தேசியக் கொடி எரிக்கப்பட்டது.

ஓரிடத்தில் பிரதமர் நரசிம்மராவின் கொடும்பாவி கொழுத்தப்பட்டது தலைநகர் ஸ்ரீ நகரில் தீவிரவாதிகள் ஊரடங்கு அறிவித்திருந்தனர். கடைகள் மூடப்பட்டிருந்தன. மோதல்கள் நடைபெற்ற பல இடங்களில் அரசு ஊரடங்கு உத்தரவு பிறப்பித்திருந்தது.

## இன்று

குருநகர், ஆக. 16

யாழ். திருமறைக் கலாமன்ற சிறுவர் கலைக்கூடம் வழங்கும் கலை நிகழ்ச்சிகள் இன்று மாலை 6 மணிக்கு மன்றக் கலை அரங்கில் நடைபெறும். (ஒ-51)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
21-06-1932



உதிர்வு:
16-07-1992

### திருமதி அழகம்மா நல்லையா
[ இளைப்பாறிய ஆசிரியை ]

அம்மாவும் அப்பாவும்
அன்புடனும் ஆதரவுடனும்
பண்புடனும் பாசத்துடனும்
வளர்த்திட்ட குடும்பம் இது.
ஆலமரம் போன்றிருந்த
அப்பா மறைந்ததனால்
அனைத்துமே அம்மாதான்
என்று நாம் இருந்தோம்.
அழுதால் அணைத்திடும் அம்மா - எம்மை
அழவைத்துப் போனது எங்கே ?
துயரம் என்ற ஓர் உணர்வை
நாம் சுமந்து நிற்கின்றோம்.

25, கரன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

பாசமிகு
பிள்ளைகள்,
மருமகன், பேரன்.
[22191]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்எண்ணெய் அனுப்பாவிடில்

# யாழ்ப்பாணம் விரைவில் பாலைவனமாகும் ஆபத்து

### யாழ். கல்விமான் கடிதம்

யாழ்ப்பாணம், ஆக. 16

யாழ்ப்பாணத்துக்கு மண்எண்ணெய் அனுப்பாது விட்டால் யாழ்ப்பாணம் விரைவில் பாலைவனமாகி விடும்.

ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் பாஸ்கரலிங்கத்துக்கு யாழ் கல்விமான் ஒருவர் மேற்கண்டவாறு கடிதம் அனுப்பி உள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இல்லாததால் மக்கள் விறகுக்காக மரங்களை வெட்டுகிறார்கள். மண்எண்ணெய் அனுப்பினால் விறகுப் பாவனைக்காக மரங்கள் வெட்டப்படுவது குறையும். அத்துடன் மண்எண்ணெய் இல்லாததால் விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்படி அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் யாழ். மாவட்டத்துக்கு அவசரமாக ஆயிரம் பரல்கள் மண்எண்ணெய் அனுப்புமாறு அரச அதிபர் கோரிக்கை விடுத்த போதும், புனர்வாழ்வு அமைச்சு 60 பரல்கள் மண்எண்ணெய்யை மட்டுமே வழங்க இணங்கி உள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி வரும் குமாரி கப்பலில் இந்த 60 பரல்களும் எடுத்து வரப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் யாழ். அரச அதிபர் கொழும்பில் பேச்சு நடத்திய சமயம், ஆயிரம் பரல்கள் மண்எண்ணெய் அனுப்ப சம்மதம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மண்எண்ணெய் அனுப்புவதில் கூட்டுப்படைத் தலைமையகம் கட்டுப்பாடு விதிக்கும் காரணத்தால், கூடுதல் மண்எண்ணெய்யை அனுப்ப முடியாதுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது. [இ-3]

## தோட்டத் தொழிலாளருக்கு வீடும், காணியும் சொந்தம்

### தொண்டமான் புதிய திட்டம்

தோட்டத் தொழிலாளருக்கு அவர்கள் வசிக்கும் வீடும், காணியும் சொந்தமாகும்.

அமைச்சர் தொண்டமான் பண்டாரவளை நகரமண்டபத்தில் நடந்த வரவேற்புபசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எதிர்வரும் 30 ஆம் திகதி எனக்கு 80 வயதாகிறது. அடுத்த ஆண்டு எனக்கு 81 வயதாவதற்கு முன்பு, தோட்டத் தொழிலாளர் வசிக்கும் வீடும், காணியும் அவர்களுக்கே சொந்தமாக வழிவகை செய்வேன்" — என்றும் அமைச்சர் உறுதியளித்தார். [இ-எ]

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிகள்

கொழும்பு, ஆக. 16

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் செப்டம்பர் முதலாம் திகதி என்று வடக்கு-கிழக்கு மாகாண சபையின் சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இப்பதவிகளுக்கு சேவையில் இருக்கும் முதலாந்தர வைத்திய அதிகாரிகள் மற்றும் ஓய்வுபெற்ற 65 வயதுக்கு மேற்படாத முதலாம் தர அல்லது நிர்வாக தரத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (இ-எ)

## வடக்கில் நடக்கவிருக்கும் ராணுவ நடவடிக்கை பற்றி இப்படியும் ஒரு தகவல்

திட்டமிட்டபடி வட பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

"ஒப்பரேஷன் பலவேகய நடவடிக்கை போன்று பெரியதாக இல்லாவிடினும், பெரிது போன்றதாக அந்த நடவடிக்கை இருக்கும்" — என்று ஒரு வட்டாரம் தெரிவித்ததாக "த ஐலண்ட்" செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## புற்று நோயாளர் சங்க கண்காட்சிச்சாலை

கொழும்புத்துறை, ஆக 16

யாழ். மாநகர சபையின் ஆதரவுடன் நல்லூர் கந்தசுவாமி கோவில் இந்து விடுதிக்கு அருகாமையில் வட மாகாண புற்று நோயாளர் சங்கத்தின் கண்காட்சிச் சாலை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் யாழ். சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் எஸ். ஜெகநாதன் கண்காட்சி சாலையை திறந்து வைத்தார்.

புற்றுநோயை இனங்காணல், தடுப்பு முறைகள், நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கல் போன்ற விடயங்களை இச் சங்கம் முழுமையாக செயற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டது. [த-30]

## அரச சேவை நியமனங்கள்:

## இனவிகிதாசாரம் இனிமேல் நடைமுறையில் இருக்காதாம்

கொழும்பு, ஆக. 16

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் அரச சேவைக்கு நியமனங்கள் வழங்கப்படும் போது இன விகிதாசாரம் கடைப் பிடிக்கப்படமாட்டாது.

விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சித்துறை அமைச்சர் தர்மதாஸா பண்டா கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

திகாமடுல்ல எம். பி. ஜனாப் எம். எச். எம். அஷ்ரப்பின் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் டிசம்பர் 29 இல் இலங்கை விவசாய சேவைக்கு வகுப்பு 2 தரம் 2 விவசாய அதிகாரிகளை தெரிவு செய்ய திறந்த போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டது. அப்பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். போதுமான தகைமையில்லாத காரணத்தால் ஒருவருக்கு நியமனம் வழங்கப்படவில்லை. நியமனம் பெற்ற 64 பேரில் ஆறு பேர் முஸ்லிம்கள், 9 பேர் தமிழர்கள் மற்றும் 2 பேர் மலாய் வாசிகள் —

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். [த-எ]

## ஜெயலலிதா மீது கருணாநிதி ஊழல் குற்றச்சாட்டு

### வழக்கு தொடரப் போவதாக அறிவிப்பு

சென்னை, ஆக. 16

ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது வழக்குத் தொடரப் போவதாக தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் இதனைத் தெரிவித்த திரு. கருணாநிதி —

ஸ்பிக் நிறுவனத்துக்கு காட்டிய சலுகைகள், சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையை தனியாரிடம் ஒப்படைத்தது, பஸ்களுக்கு வரி குறைப்பு போன்றவற்றில் கோடிக்கணக்கான ரூபாய்க்கு ஊழல் புரிந்ததாக செல்வி ஜெயலலிதா மீது குற்றஞ்சாட்டினார்.

இந்த ஊழல் நடவடிக்கைகள் பற்றி நீதிமன்றத்தில் அ. தி. மு. க. அரசுக்கு எதிராக வழக்குத் தொடர விரைவில் தாம் மாநில ஆளுநரை அணுகி அனுமதி கோரவிருப்பதாகவும் திரு. கருணாநிதி தெரிவித்தார். [த-எ]


நெல்லியடியில்
**V.E.C.**
கல்வி நிறுவனம்
**A/L 93**
PAPER CLASS
20 — 08 — 1992
வியாழன்
★ இரசாயனம்
சண் 2 — 3p.m
★ தூய.பிரயோக கணிதம்
அருளானந்தம் 3 — 5p.m
★ தாவரவியல்
குணசீலன் 3 — 4p.m
★ பௌதிகம்
சோதிலிங்கம் 5 — 6p.m
[22159]

Practice Makes One Perfect
**O/L 92**
விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், வர்த்தகம், ஆகிய பாடங்களுக்கான பகுதி 1 + பகுதி 11
பயிற்சிப் பரீட்சைகள்
3 ஆவது பரீட்சை:
16 - 08 - 1992
ஒவ்வொரு மாதத்தின் 3 ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் இந்நிறுவனங்களில் நடத்தப்படும். இந்நிறுவனங்களில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பயிற்சிப் பரீட்சைகளில் பங்கேற்கலாம்.
★ Bond — யாழ்ப்பாணம்
★ Selin — இருபாலை
★ Pearl — நீர்வேலி
★ Kugan — ஆவரங்கால்
★ Satha Pons — வடமராட்சி
Brilliant — தென்மராட்சி
★ Vinyls — சுன்னாகம்
★ National — பண்டத்தரிப்பு
★ Vinayahar — மானிப்பாய்
★ Y. M. C. A. — பருத்தித்துறை
★ Maths Centre — நெல்லியடி
வினாத்தாள்கள் பெற விரும்பும் பாடசாலைகள் தொடர்பு கொள்ளவும்.
விபரங்களுக்கு:
Examination Unit,
BOND Institutes,
Jaffna.
[இ-3036]

யா/ நெல்லியடி
மத்திய மகா வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சபை
பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்
★ ஆசிரியர்களுக்கான கூட்டம் — முற்பகல் 9-00 மணி
★ பெற்றோர்களுக்கான கூட்டம் — முற்பகல் 10-00 மணி
★ பழைய மாணவர்களுக்கான கூட்டம் — முற்பகல் 11-00 மணி
காலம்: 23 - 08 - 1992 ஞாயிற்றுக்கிழமை
இடம்: பாடசாலை "ட" மண்டபம்
தயவு செய்து சகல ஆசிரியர்களையும், பெற்றோர்களையும், பழைய மாணவர்களையும் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.
சி. சிற்றம்பலம், அதிபர்.
யா/ நெல்லியடி ம. ம. வி.,
கரவெட்டி.
[5253]

A/L MATHS
Mr. குணசிங்கம் B. Sc. (Hons)
94 A/L பிரிவு-II
93 A/L அலகு ரீதியான - மீட்டல் வினா - விடை
ஆரம்பம்: 16-08-1992 (இன்று)
Personal
NEW SCIENCE CENTRE
JAFFNA.
இவ் ஆசிரியரின் வகுப்புக்கள் யாழ். நகரில் இந் நிறுவனத்தில் மட்டும் நடைபெறும்
[சி-3140]

ஓ... இந்த இடத்தில் மீண்டும் சந்திக்கின்றோம்
நேற்றைய தினம் தாகத்தைப் பூர்த்தி செய்யும்
ஒரு பொருள் பற்றி
ஓர் அறிவித்தல் வந்தது
ஒன்றும் விளங்கவில்லையா?
நாளை வரை பொறுத்திருங்கள்.
(விளம்பர அமைப்பு: செனித் ஜோ எக்...)
[22168]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

கௌரவமான யாழ். இந்து குடும்பத்தைச் சேர்ந்த அமெரிக்காவில் தொழில் புரியும் 33 வயது, புனர்பூசம், 2 எண்கார மகனுக்கு பெற்றோர் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த படித்த, அழகான துணையைத் தேடுகிறார்கள். முதல் கடிதத்திலேயே முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 432, மே/பா, உதயன்.

[22183]

### மணமகன் தேவை

இந்து, யாழ்; 35 வயது, மகம், கணக்கியல் விகிதராக அரசாங்கத்தில் தொழில் புரியும் அழகிய மணமகளுக்கு எக்கவுண்டன்ற், டாக்டர், என்ஜினியர், மற்றும் அரசாங்க / தனியார் துறையில் தொழில் புரியும் மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். சகல விவரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். இல: 431, மே/பா, உதயன்.

(22173)

### ஜீவாகாரம்

குறைந்த செலவில் நிறைவான உணவாகவும், போஷாக்கு குறையை நீக்கவும் பாவியுங்கள்! ஜீவாகாரம். இதில் 100 கிராம் ஜீவாகாரத்தில் 17 கிராம் புரதமும், 400 கிலோ கலோரி சக்தியுமுண்டு. உங்கள் தேவைக்கு ஏற்ப தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா தொழிலகம், இணுவில்.

[சி-3143]

### கல்வி

G. C. E. [O/L] இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவம் உடைய ஆசிரியரினால் இரண்டு மாதங்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன். இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி.

[22087]

### புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, பிரான்வி வீதி, யாழ்ப்பாணம்.

[5237]

### A/L மாணவர்களுக்கு

இந்து நாகரிகம் இதழ் - 6 வெளிவந்து விற்பனையாகிறது. ஆக்கம்: க. சி. குலரத்தினம், பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.

[சி/3138]

### சோதிடம்

கல்வியில் சித்தியா, உத்தியோகம் கிடைக்குமா, வியாபாரம் சிறக்குமா, விவாகம் நடைபெறுமா ஜாதகக் குறிப்பு எழுதிப் பலன் அறியவும், கைரேகை, எண்சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்கவும் தொடர்பு: தினமும் காலை 8-00 மணி முதல் 12-00 மணி வரை. த. சிவானந்தன், பிரபலசோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. கிளை: 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தினமும் பிற்பகல் 3-00 மணி முதல் 6-00 மணி வரை.

[22175]

### O/L கணிதம்

Credit, Distinction பெறு பேறடைய 15 வருடங்கள் விடைத்தாள்கள் திருத்திய B.Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி.

[22127]

### தவறிவிட்டது

இரட்ணசிங்கம் இன்பராஜா ஆகிய நான் மினி பஸ்ஸில் பயணம் செய்யும்போது மல்லாகத்திற்கும் துர்க்கையம்மன் ஆலயத்திற்குமிடையில் இல. 522052795 X அடையாள அட்டையுடன், முக்கிய கடிதங்கள் அடங்கிய கைப்பையொன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இ. இன்பராஜா, ஏழாலை தெற்கு, ஏழாலை என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.

[4944]

விற்பனையாகிறது!

## கணிதம்

ஆண்டு - 5

புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய வினாத் தாள்கள்-விடைகளுடன்.

ஆக்கம்: த. ஆனந்தன்

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

[22182]

கொக்குவில் இந்துக்கல்லூரி

பழைய மாணவர்களுக்கான

## விசேட கூட்டம்

பாடசாலை அபிவிருத்தி சபைக்கு பழைய மாணவர்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 23-08-1992 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருப்பதால், சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அதிபர்,
கொக்குவில்-
இந்துக்கல்லூரி.

கௌரவ செயலாளர்,
கொக்குவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

(22172)

## வலி - கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
## கேள்வி விளம்பரம்

1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிவரை கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன. அன்றைய தினம் காலை 11-00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப் பணத்தையும், கிரயப் பணத்தையும், 25-08-1992 ஆம் திகதி 12-00 மணி வரை வலி - கிழக்கு பிரதேச சபை, நீர்வேலியில் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு காரியாலயத்தில், காரியாலய நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

வலி - கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி.

சி. முருகேசபிள்ளை,
விசேட ஆணையாளர்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|
| 1. | வீரபத்திர கோவில் வீதி திருத்தம், கோப்பாய் | 500/- | 150/- |
| 2. | அல்லியவத்தை வீதி திருத்தம், கோப்பாய் | 250/- | 100/- |
| 3. | கலைமணி வீதி திருத்தம், கட்டப்பிராய், கோப்பாய் | 250/- | 100/- |
| 4. | ஞானவைரவர் தம்பகிட்டி வீதி திருத்தம், உரும்பராய் | 500/- | 150/- |
| 5. | இந்துக்கல்லூரி வீதி திருத்தம், உரும்பராய் | 500/- | 150/- |
| 6. | குமாரசாமி வீதி திருத்தம், புத்தூர் | 250/- | 100/- |
| 7. | கொய்வளை வீதி திருத்தம், ஆவரங்கால், புத்தூர் | 500/- | 150/- |
| 8. | அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதியும், ஒழுங்கைகளும் திருத்தம் | 500/- | 150/- |
| 9. | நெல்லியோடை வீதி திருத்தம், அச்சுவேலி | 500/- | 150/- |
| 10. | பிட்டியனொல்லை, மகிழவைரவர் வீதி திருத்தம், நீர்வேலி | 250/- | 100/- |
| 11. | பன்னாலை வீதி திருத்தம், நீர்வேலி | 250/- | 100/- |
| 12. | இராசவீதி கொலனி வீதி திருத்தம், நீர்வேலி | 250/- | 100/- |

[சி-3058]

## 18 வயது நிரம்பியோரும் உயில் எழுதலாம்


கொழும்பு, ஆக. 16 பதினெட்டு வயது நிரம்பியவர்களும் உயில் எழுதக்கூடியதாக உயில் சட்டம் திருத்தப்படவுள்ளது.

தற்போதைய உயில் சட்டத்தின்படி, 21 வயது நிரம்பாத ஒருவர் திருமணமாகியிருந்தால் மட்டுமே உயில் எழுத முடியும். மற்றப்படி அவர் உயில் எழுதத் தகுதியற்றவர் என்று அறிவிக்கப்படுகிறது. 18 வயது நிரம்பியவர்களும் உயில் எழுத புதிய சட்டத் திருத்தம் இடமளிக்கிறது. [இ-எ]

## பொலீஸாரின் உறவினர் பஞ்சாபில் கொலை

பஞ்சாப் மாநிலத்தில் கடந்த சில தினங்களாக சீக்கியத் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட பொலீஸாரின் உறவினர்களின் எண்ணிக்கை 54 ஆக உயர்ந்துள்ளது. [இ-எ]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 08 — 02 — 1934

உதிர்வு: 17 — 07 — 1992

### திருமதி அன்னலட்சுமி சிவஞானசம்பந்தன்

திதி: 16-08-1992

மாதம் ஒன்று மறைந்தது
மனது உங்களை மறக்கவில்லை!
அன்னலட்சுமி உலகுக்கு
அன்னை லட்சுமி நீங்கள் எமக்கு
மாதம் ஒன்று மட்டுமல்ல
ஆண்டு பலதான் சென்றாலும்
அன்னை உங்களை மறப்போமோ!
அரனார் அடியில் இன்புறவே
அன்பாய் நாமும் வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

''அன்பழகன் வீதி''
கோப்பாய் தெற்கு,
இருபாலை,

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[22180]

## St. John's College, Jaffna and Chundikuli Girls College, Jaffna.

## ADMISSION-1993

1. பின்வரும் வகுப்புக்களில் மட்டும் வெற்றிடங்கள் உண்டு.

**ஆண்டு ஒன்று, ஆண்டு ஆறு.**

2. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் - **21-09-1992.**
   - அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 01-09-1992 முதல் 14-09-1992 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   - ஆ) எக்காரணங் கொண்டும் 14-09-1992க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் கொடுக்கப்படமாட்டா.
   - இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
   - ஈ) 21-09-1992க்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இணைக்கப்பட வேண்டும். பிழையாகவோ அன்றி பூரணமாகவோ நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை அவ்வக் கல்லூரிகளில் படிவமொன்றிற்கு ரூபா 100/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
5. வயதெல்லைகள்:
   - அ) ஆண்டு ஒன்று — விண்ணப்பதாரி 01-02-87க்கும் — 31-01-88க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   - ஆ) ஆண்டு ஆறு — விண்ணப்பதாரி 01-02-82 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
6. பிரவேசப் பரீட்சை:

ஆண்டு ஆறு வகுப்புக்கு 17-10-1992 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

**- அதிபர்கள்.**

[சி-3041]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### முக்கியம் அதுவே

தமிழகத்தின் முன்னாள் முதல் மந்திரி கலைஞர் கருணாநிதிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஜெயலலிதா அரசு ஆணைக்குழு ஒன்றை நியமித்திருக்கிறது.

இதே வேளை, இப்போதைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது, தாம் ஊழல் குற்றச்சாட்டு வழக்கைத் தாக்கல் செய்யப்போவதாக கலைஞர் கருணாநிதி அறிவித்திருக்கிறார்.

தனிநபர் செல்வாக்கை உயர்த்துதல், அடுத்தவர் மீது சேறு பூசுதல், ஊழல், அரசியல் பழிவாங்கல், அராஜகம், அடாவடித்தனம் ஆகிய மூன்றாந்தர அரசியல் அணாம்சங்களுக்குத் தமிழகம் எப்போதுமே பெயர் பெற்றது.

அந்த வகையில் விபத்தாக ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிய செல்வி ஜெயலலிதா அரசியல் பழிவாங்கலில் ஆரம்பத்திலிருந்தே ஈடுபட்டு வருகிறார்.

அது ஒரு புறமிருக்க, தமிழகத்தில் தமிழ்த் தேசிய வாதம் வளராமல் தடுப்பதில் அதிக அக்கறை காட்டி வருகிறார் அவர். அதனால் கருணாநிதி மீது என்று மட்டும் இல்லாமல் திராவிடர் உயர்ச்சியை மழுங்கடித்து விடுவதற்குத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறார். தமிழ்த் தேசிய வாதம் வளர்ந்தால் தமிழகம் மற்றொரு பஞ்சாப்பாகக் கொதிக்க ஆரம்பித்துவிடும் என்பதை நன்கு தெரிந்து கொண்ட மத்திய அரசும், ஜெயலலிதா கேட்பவற்றைக் கொடுத்து அவருக்குப் பக்கபலமாக நிற்கிறது.

அதற்கும் மேலாக, அ. தி. மு. க. மத்திய அரசின் தோழமைக் கட்சி, சிறுபான்மை அரசுக்கு ஆதரவு நல்கும் - பலம் சேர்க்கும் - கட்சி என்ற நிலையை தனக்கு வாய்ப்பாக்கி, மத்திய அரசிடம் பல காரியங்களை செல்வி ஜெயலலிதா சாதித்து வருகிறார்.

ஆனால் புதுடில்லியில் அரசியல் நிலை இப்போது சிறிது மாறி வருகிறது. அ. தி. மு. கவின் ஆதரவின்றியே நரசிம்மராவ் சிறுபான்மை அரசு இயங்குவதற்கான கருக்கட்டல்கள் நடந்து வருகின்றன. ஜனதா தன் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவை தக்கபடி பயன்படுத்த ராவ் நாசூக்காகக் கருமமாற்றி வருகிறார்.

காங்கிரஸ் கட்சிக்கு உரிய மரியாதை வழங்காமல் செல்வி ஜெயலலிதா எடுத்தெறிந்து பேசி வருவது ராவுக்குப் பிடிக்கவில்லை என்றும், அதனாலேயே ஜனதா தளத்தில் ஏற்பட்ட பிளவை தக்கபடி கவ்விப் பிடித்துக் கொள்ள அவர் முனைகிறார் என்றும் சொல்லப்படுகிறது.

விடுதலைப் புலிகளை தடை செய்யும் விவகாரத்தில் கூட, ஜெயலலிதா கொடுத்த தொந்தரவினாலும், காவிரீ நீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக ஒரு மாற்று மருந்தாகவுமே மத்திய அரசு தடையைப் பிரகடனப்படுத்தியதாக உள்வீட்டுத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

எது எப்படியோ, தமிழ்த் தேசிய வாதம் தமிழ் நாட்டில் வளராமல் தடுக்கும் ஜெயலலிதாவின் நடவடிக்கைகளை முறியடிப்பதிலேயே தமிழக மக்கள் கவனம் செலுத்த வேண்டும். ஜெயலலிதாவும், கருணாநிதியும் தமது அரசியல் செல்வாக்குகளைக் காப்பாற்ற அவர்களுக்கு உதவுவது முக்கியமல்ல.

தமிழ்த் தேசியத்தை தமிழகத்தில் அழிய அனுமதித்தால் ஆரியர் ஆதிக்கமும், அடக்குமுறையும் அங்கு திடீரெனக் கவிந்து விடும். இதுவிடயத்தில் தமிழ்நாட்டு மக்கள் மிகவும் எச்சரிக்கையுடனும், புத்திசாலித்தனத்துடனும் செயலாற்ற வேண்டும்.

# தொண்டா போக இந்தியா உண்டு; சிங்களவருக்கு வேறு நாடு இல்லை

## இனவாதம் கக்குகிறார் சு. க. எம். பி.

கொழும்பு, ஆக. 16

'அமைச்சர் தொண்டமான் விரும்பினால் இந்தியாவுக்கு போகலாம். ஒரு வேளை அந் நாட்டின் பிரதமராக, இல்லையேல் தமிழ் நாட்டின் முதல்வராக வரலாம். தமிழக முதலமைச்சராகவிருந்த எம். ஜி. இராமச் சந்திரனை இனி சுத்தேனையில் இருந்து நாம் அனுப்பினோம். ஆனால் எங்களுக்குத்தான் இலங்கையை விட்டால் வேறு நாடில்லை'

இப்படிக் கூறினார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம். பி. டி. எம். ஜயரத்ன.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கவலை வெளியிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'தோட்டப்புற மக்களை விட கிராமப்புறங்களின் வாழ்க்கைத் தரம் மோசமானது. அவர்கள் வசதியாக வாழக் காணியில்லை. இப்படிக் கஷ்டப்படும் மக்களை அமைச்சர் தொண்டமான் வந்து பார்க்க வேண்டும்.

தோட்டங்கள் முழுவதையும் நீங்கள் கட்டியாண்டால் கிராம மக்கள் எங்கே போவது? அவர்கள் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் அவர்களுக்கு வேறு நாடு கிடையாது'— என்றும் அவர் சொன்னார். (அ-3)

## பிரதி பதிவாளர் நாயகம் வட -கிழக்குக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஆக. 16

பதிவாளர் திணைக்கள வேலைகளை பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு பிரதி பதிவாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பதிவாளர் திணைக்கள வேலைகள் இதுவரை காலமும் கொழும்பில் மட்டும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் பிறப்பு, இறப்பு, விவாக பதிவுகள் யாவும் கொழும்பிலேயே செய்யப்பட்டு வந்தன.

இந்த வேலைகளை பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ், ஏனைய மாகாணங்களுக்கு பதிவாளர் நாயகங்கள் ஏற்கனவே நியமிக்கப்பட்டு விட்டனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்குப் பொதுவாக தமிழர் ஒருவர் கடந்த மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார். (த-3)

## கண்காட்சியில் சிறகவரை உற்பத்திக்கு முக்கியத்துவம்

சித்தன்கேணி, ஆக. 16

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடந்த மனையியல்— பொருளியல் கண்காட்சியில் 'வை-12' சகடை விமான வடிவில் அமைந்த 'கேக்' பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது.

விவசாயப் பிரிவில் மாணவர்கள் உற்பத்தி செய்த பெரிய சிறகவரை உற்பத்தியும், மண்வெட்டி, குப்பை வாரி என்பனவும் சிறப்பாக அமைந்திருந்தன. சிறகவரையை இலகுவில் பயிரிடக் கூடிய விளக்க முறைகள் தெரிவிக்கப்பட்டன'

இக் கண்காட்சியை பண்டத்தரிப்புக் கோட்டக்கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. மகேசவேலு, விவசாய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வி. மகேந்திரன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

மனையியல் பகுதியில் பூவரசம் பழுத்த இலைப் பிட்டு, குறிஞ்சா இலைப்பிட்டு, ஒடியற்பிட்டு, பனம் பாணிக் கேக் என்பனவும் வைக்கப்பட்டிருந்தன.

விவசாயப் பிரிவில் மாணவர்களால் உண்டாக்கப்பட்ட தேசிக்காய் கன்றுகள், பலாக் கன்றுகள் போன்றவையும் மாதிரி நாற்று மேடைகளும் சிறப்பாக அமைந்திருந்தன. [அ-142]

## நல்லூரில் இன்று

நல்லூர் கந்த சுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் — 14 ஆம் திருவிழாவான இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ கிழக்கு வாசல் ஸ்ரீ முருகன் தண்ணீர்ப்பந்தலில் (மாலையில்)— நவமணி பதமநாதனின் இன்னிசைக் கச்சேரி.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் [மாலையில்] — கானசுதா வாரிதி பிரம்ஸ்ரீ வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தும் ''வீரவாகு தூது'' என்ற பொருளிலான கந்தபுராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2. 00 மணிக்கு — பௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை. [ஞ-30]

## சமய அறிவுப் போட்டிகள்

அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான மஹோற்சவத்தை முன்னிட்டு இம்முறை சமய அறிவுப் போட்டிகள் நடத்தப்பட இருக்கின்றன.

திருவிழா நாட்களில் சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவமகாலிங்கம் 12 தலைப்புகளில் நிகழ்த்தும் உரைகளில் இருந்து போட்டிக்கான வினாக்கள் தெரிவாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [த-11]

## அறணை கடித்த 9 வயதுச் சிறுமி ஆபத்தான நிலையில்

அறணை கடித்த சிறுமி ஒருவர் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த சுகந்தினி (வயது 9) என்பவரே இச் சிறுமி ஆவார். (இ-11)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 16

மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் 7பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

இன்றைய ஆட்டத்தில் சென். மேரீஸ் ''ஏ'' அணியை எதிர்த்து ஜோன் கெனடி அணியும், விக்கினேஸ்வரா அணியை எதிர்த்து சத்தியா அணியும் மோதுகின்றன.

## இலங்கை வெற்றி!

கொழும்பு, ஆக. 16

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கும் இலங்கை அணிக்குமிடையே நேற்று கொழும்பில் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் சர்வதேச போட்டியில் இலங்கை அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

ஆஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 247 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை அணி 49. 2 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 251 ஓட்டங்கள் எடுத்தது.

சிறந்த ஆட்டக்காரராக— 105 ஓட்டங்கள் எடுத்த—அரவிந்த டீ சில்வா தெரிவு செய்யப்பட்டார். [உ-10]

## ஊனமுற்ற பெண்களுக்கு இலவச தையற் பயிற்சி

கொழும்புத்துறை, ஆக. 16

ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கப்பணி மனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தையல் தொழிற் பயிற்சி நிலையத்தில் ஊனமுற்ற வசதி குறைந்த குடும்பப் பெண்களுக்கு இலவசமாகத் தையற் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதுடன், பயிற்சிக்காலம் முடியும் வரை தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கம் தனது நடவடிக்கைகளை விரிவு படுத்தி வருவதாகவும், அதில் ஒரு கட்டமாகவே இத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஊனமுற்றிருந்தாலும் கூட சுய தொழிலுடன் வருவாயையும் ஈட்டிக் கௌரவமாக வாழ வழி செய்யும் நோக்குடன் இயங்கி வரும் இச்சங்கம் பரோபகார சிந்தையுள்ளவர்களின் நிதி உதவியைக் கொண்டே செயற்பட்டு வருவதாக சங்கத்தின் பொருளாளர் திருமதி ஜே. எம். சிவப்பிரகாசம் தெரிவித்தார். [த-30]

# எமது தேசியத்தை காக்க போர் தவிர்க்க முடியாதது

## கலைஞானி கண்காட்சி திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 16

எமது அரசியல் வரலாற்றின் மூன்று காலகட்டங்களில் சேர். பொன் இராமநாதன், தந்தை செல்வா போன்றவர்கள் தமிழ் தேசியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். இன்றைய தலை முறை தனது தேசியத்தைக் காக்க போர் முறையைக் கைக் கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாததே.

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில், கலைஞானி கண்காட்சி திறப்பு விழா வைபவத்தில் உரை நிகழ்த்துகையில் பேராசிரியர் எஸ்; சிற்றம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இந்த வைபவம் நடைபெற்றது.

வைபவத்தில் பேராசிரியர் சிற்றம்பலம் தொடர்ந்து பேசுகையில் தமிழ் கலாசார மறுமலர்ச்சிக்கு வித்திட்ட எமது முன்னோடிகளினதும் இன்றைய தலை முறையினரதும் ஆதார பூர்வமான சான்றுகள் கலைஞானியின் சேகரிப்பில் உள்ளன. இவை பாதுகாக்கப்படுவதன் மூலம் தமிழினத்தின் வரலாற்றை உலகம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றார்.


யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பொ. பாலசிங்கம் பேசுகையில், எமது எதிர்காலத்துக்காக இக் கலைப் பொருள்களைப் பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து காத்திரமாக ஆராயப்பட வேண்டும்.

எமது வருங்கால சமுதாயம் தனது பண்டைய அரசியல் சமூக, பொருளாதார வளங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இவற்றைப் பேண வேண்டியது நமது கடமை என்றார்.

மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா கலைஞானிக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

நல்லை ஆதீன முதல்வர் [illegible] திருவாளர் க. சி. குலரத்தினம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. வேலாயுதம் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

பலதரப்பட்ட தொல்பொருள் சான்றுகளைக் கொண்ட இக் கண்காட்சி எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறும். [இ-111]



## பிரபா துணையாய் வருகவே!

வருக! வருக! என்றழைத்தும்
வந்து எமக்குத் துணையாக
வளரும் உரிமைப் போரினிலே
வாகை சூட வையாயேல்,
பெருக உருக நான் பாடேன்
பெயர்த்தும் பாடல் நல்லூரா!
பிரிய மாக வேண்டுமெனில்
பிரபா துணையாய் வருவாயே!

- முருகனடியான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வேலுப்பிள்ளை முத்தம்மா

கோண்டாவிலைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை முத்தம்மா கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் மனைவியும், பாலசுந்தரம் [இளைப்பாறிய அதிபர், யாழ். மத்திய கல்லூரி], புஸ்பநாதன் [உரிமையாளர், உமா கொப்பறா மில், சிலாபம்], தங்கவடிவேல் [கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்], புஸ்பவதி, திலகவதி [பிரதி ஆணையாளர், இறைவரித் திணைக்களம், கொழும்பு], பத்மாவதி [அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்புத் தாயாரும், கருணாவதி, சூரியபவளம், ஞானபூபதி, மகாலிங்கம் [ஆய்வுகூட உதவியாளர், யாழ். இந்துக் கல்லூரி], மகாவந்தன் [அரசாங்க தொழிற்சாலை முகாமையாளர், கொலன்னாவ], இராமகிருஷ்ணசாமி [விரிவுரையாளர், சிட்னி பல்கலைக் கழகம் - அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 15-8-92 இல் [64/1 A, பாடசாலை அவென்யு, தெகிவளை] நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வே. பாலசுந்தரம்,
வே. தங்கவடிவேல்.

அம்மன் கோவிலடி,
கோண்டாவில்.

[22185]

## மாணிக்கம் பரநிருபசிங்கம்

(பெரியபாலர்)

முன்னாள் யாழ். பிரபலவர்த்தகர் புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மாணிக்கம் பரநிருபசிங்கம் 02 08-1992இல் புங்குடுதீவில் காலமானார். அன்னார் அமரர் மாணிக்கம் சின்னத்தங்கம் தம்பதிகளின் அருமை மகனும், நல்லதம்பி மற்றும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், அம்பலவாணர், அருணாசலம், சுந்தரிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும், செல்லம்மாவின் அன்புக்கணவரும், தவயோகராசா [கொழும்பு], பரமேஸ்வரி, யோகேஸ்வரி, இராஜகோபால், சத்தீஸ்வரி, அமிர்தலிங்கம், உலகநாதன், மாணிக்கராசா, மோகனேஸ்வரி, கணகலிங்கம், ஜெகதீஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அருமைத் தந்தையும், கில்டா [கொழும்பு], குணரெத்தினம், குமாரகுலசிங்கம், இராஜரெத்தினம், இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 03-08-92 இல் புங்குடுதீவு, சேரதீவு மயானத்தில் நடைபெற்றன இவ்வறிவித்தலைத் தயவுசெய்து உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம். அன்னாரின் துக்க அனுதாபம் கொழும்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

தகவல்:
திருமதி யோகேஸ்வரி குமாரகுலசிங்கம்
(மகள்)

நம் 9. முதலியார் ஒழுங்கை,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

[22187]

## இராமலிங்கம் நல்லதம்பி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திரு. இராமலிங்கம் நல்லதம்பி அவர்கள் [முன்னாள் தலைமை ஆசிரியர், யாழ். இந்து கனிஷ்ட பாடசாலை] 30 - 07 - 92 இல் சென்னையில் காலமானார். இவர் யோகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற Dr. கந்தசாமி [கனடா], குலசிங்கம் [லண்டன்], அழகரத்தினம் [லண்டன்], யோகரத்தினம் [லண்டன்], சுந்தரலிங்கம் [சென்னை], சிவகுமார் [லண்டன்], கமலேஸ்வரி [பத்மா - தென் ஆபிரிக்கா], பூபதி [ஜேர்மனி], நந்தியவதி [சென்னை], யோகேஸ்வரி [லண்டன்], ஞானேஸ்வரி [சென்னை] ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 31 - 07 - 92 அன்று சென்னையில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
திருமதி கமலேஸ்வரி
(பத்மா)

தென் ஆபிரிக்கா.
[சி/3144]

## திருமதி பழனியர் தம்பு நாகம்மா

நயினாதீவை பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பு நாகம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பழனியர் தம்புவின் அன்பு மனைவியும், திருமதி புவனேஸ்வரி நடராஜாவின் அன்புத் தாயாரும், Dr. பொ. நடராஜாவின் மாமியாரும், திருமதி வினிதமலர் கனகேஸ்வரன், சிறீரஞ்சன், திருமதி ஜீவமலர் சிறீதரன், பிரபாகரன், அரவிந்தன், கனகேஸ்வரன், திருமதி கிருஸ்ணகுமாரி சிறீரஞ்சன், சிறீதரன், திருமதி சுலோஜனா பிரபாகரன் ஆகியோரின் பேத்தியும், சுஜீவன், தீபா, சிறோமி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16 08-92) காலை 8 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. P. நடராஜா.
(மருமகன்)

473/4, K K S. வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[22186]

# பாடசாலைகளுக்கிடையே உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஆக. 16

இவ்வருடம் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 17, 19 வயதுக்குட்பட்ட பிரிவு அணிகளுக்கிடையில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை நடத்த யாழ். கல்வித்திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக யாழ். கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டது.

போட்டி லீக் முறையில் நடத்தப்படும், ஒவ்வொரு கோட்டத்திலும் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகள் மாவட்ட மட்டப் போட்டிக்கு தகுதி பெறும்.

கோட்ட மட்டத்திலான போட்டிகளுக்கான விண்ணப்பங்களை பாடசாலைகள் செப்டம்பர் 5 ஆம் திகதி முன்பாக அக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்ப வேண்டும் கோட்ட மட்டப் போட்டிகள் செப்டம்பர் 10 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இத்தகவல்களை உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. அருணகிரிராஜா தெரிவித்தார். [உ]

# 50 மாத சம்பளம் வழங்கப்படும்

மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் டிப்போக்களில் மேலதிகமாக இருக்கும் ஊழியர்கள் தமது சுய விருப்பத்தின் கீழ் ஓய்வு பெறுபவர்களுக்கு 50 மாத சம்பளம் வழங்கப்படும்.

இதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

சாரதிகள், மெக்கானிக், மின்னியலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் வர மாட்டார்கள். [த]

# லண்டனில் வாசுதேவ

லண்டன், ஆக. 16

எதிர்க் கட்சிகளின் கூட்டு முன்னணி ஏற்படுத்தப்பட்டாலும் இனப்பிரச்சினை தொடர்பாக எதிர்க்கட்சிகள் மத்தியில் தீர்க்கமான ஒரு நிலைப்பாடு இல்லை.

இவ்வாறு லண்டன் சென்றிருக்கும் நவசமசமாஜக்கட்சி, தலைவர் வாசுதேவ நாணயக்கார அங்கு வைத்து பி. பி. ஸி. க்குத் தெரிவித்தார். [ஓ-10]

# ஜனதா தள் கண்டனம்

புதுடில்லி, ஆக. 16

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் ஊழல் விசாரணை நடத்த தமிழக அரசு ஆணைக்குழு ஒன்றை நியமித்திருப்பதை ஜனதா தள் கட்சி கண்டித்துள்ளது.

கருணாநிதி மற்றும் அவரின் குடும்பத்தினர் மீது அரசியல் வஞ்சம் தீர்க்கும் முயற்சியில் மாநில அரசு இறங்கியுள்ளதை இது எடுத்துக் காட்டுகிறது என்று ஜனதா தள் கட்சிப் பேச்சாளர் தெரிவித்தார்.

## வீட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்ததாகத் தெரிவித்து அவரின் சடலம் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இவர் 19 நாட்களுக்கு முன்னரே குழந்தை ஒன்றைப் பிரசவித்திருந்தார்.

பிரேத பரிசோதனையின் பின்னரும், மரண விசாரணையின் பின்னரும் சடலம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இறந்தவரின் கணவர், மரணச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காக வீடு சென்றிருந்தார். [அ-15]

## தாயகம்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

'எய்ட்ஸ்' பரவியது என்பதையும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

எதிர்காலத்தில் இந்தியாவில் இருந்தும் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் திரும்பி வருவோர் விடயத்தில விழிப்புடன் இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

'எய்ட்ஸ்' நோய்ப் பரிசோதனையை பூரணமாக மேற்கொள்ளத் தேவையான வசதிகள் வடக்கில் எந்த ஆஸ்பத்திரிகளிலும் இல்லாதிருப்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது

"உலகம் முழுவதும் இந்நோய் எதிர்ப்பு நடவடிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன. நோயின் தாக்கம் ஏற்படாத நிலையிலும் நாமும் அது விடயத்தில் முன் கூட்[illegible] அவசியமானது" என்று டாக்டர் ஒருவர் தெரிவித்தார். [உ-5]

# மரண அறிவித்தல்கள்

## கதிரவேலு கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியர்)

அன்னாரது ஈமக்கிரியைகள் நேற்றைய அறிவித்தலுக்கமைய 16 - 8 - 92 நடைபெற மாட்டாதெனவும் நாளை 17 - 8 - 92 திங்கட்கிழமை பகல் 10 மணியளவில் நடைபெறும் எனவும் அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. இரவீந்திரகுமார்.

அன்பழகன் (வீதி V. H. லேன்),
இருபாலை, கோப்பாய்.

[22191]

## பொன்னர் மாணிக்கம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், நாரந்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட ஊர்காவற்றுறை முன்னாள் வர்த்தகர் பொன்னர் மாணிக்கம் நயினாதீவில் காலமானார்.

இவர் பூமணியின் அன்புக் கணவரும், நமசிவாயம் (தபால் அதிபர், புங்குடுதீவு) புஷ்பவதி, ஆகியோரின் அன்புத் தந்தையும், மாணிக்கவாசகர், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், வள்ளியம்மை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, கணேஸ், காலஞ்சென்ற தில்லைவனம், செல்லாச்சி காலஞ்சென்ற இராமலிங்கம், முருகேசு, கண்மணி, மீனாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலதாசன், பிருந்தா, மயூரதாசன், தர்சினி, சுபோதினி, பரணிதரன், சர்மினி, ரஜனி, தயாபரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நயினாதீவில் நடைபெறும்.

தகவல்:
மா நவசிவாயம்

முரசொலி அருகாமை ஒழுங்கை,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

[22195]

## ராஜரட்ணம் துரைராஜா (ராசா)

மானிப்பாய் வீதி, உடுவிலைச் சேர்ந்த ராஜரட்ணம் துரைராஜா 15-08 92 நேற்றுக் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பு ராஜரட்ணம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தேவபாலன், திருமதி அதிசயரட்ணம் கணேசநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16-08-92) ஞாயிற்றுக் கிழமை 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று உடுவில் தென் இந்திய திருச்சபை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணேசநாதன்
(மைத்துனர்)

மானிப்பாய் வீதி,
உடுவில்.

[22193]

## கார்த்திகேசு ஆறுமுகம்

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது இல. 36, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலியில் வசித்தவருமாகிய கார்த்திகேசு ஆறுமுகம் காலமாகி விட்டார்.

இவர் திரு. திருமதி கார்த்திகேசு தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும், திருமதி ஆறுமுகம் நாகரெத்தினத்தின் அன்புக் கணவரும், தனபாலசிங்கம், ஸ்ரீலங்காநாயகி, லிங்காதேவி, கமலாதேவி, தயாளகுமாரன் [டென்மார்க்] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், விமலாதேவி, காலஞ்சென்ற பத்மநாதன் [பங்காளர், உமா ரேடிங் சென்ரர், கொழும்பு], சிவபாதசுந்தரம், ரவீந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், குமாரசுவாமியின் அன்பு மைத்துனரும், ஹம்சா, கௌசிகவதனி, திவாஜினி, தனுஜா, கவிதா, சுஜிதா, பிருந்தா, சிவசொரூபன், அநண்யா, துவாகரன், ரவிரேகன், நீரஜா, பவித்திரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ஆ. தனபாலசிங்கம்
(மகன்)

இலக்கம் 36,
சிவன்கோவில் வீதி,
திருநெல்வேலி.

(22194)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org